370

தமிழ்நூற் பதிப்புக் கழகத்தின் வெளியீடு நெ-11.

உ

கடவுள் துணை.

திருக்கைலாய பரம்பரை பொம்மபுரம்

ஸ்ரீசிவஞான பாலைய தேசிகராதீனத்து

நல்லாற்றூர்-துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

சோணசைலமாலை.

C

OFFICE OF THE REGISTRAR
19 APR 1928
MADRAS

இவை

தமிழ்ப் பண்டிதர்

பு. அ. கோவிந்தராஜ நாயகர் அவர்களால்

பார்வையிடப்பெற்று,

சென்னைப் புரசை,

"மாறன்" அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1928. [அணா 2

Q231.417
N28
148389.

ஆனந்தமனோரி

(அல்லது)

கொள்ளைக் கூட்டத் தலைவன்.

என்னும் அற்புத நீதிமார்க்க முறைக்கும் நூல்.

இவை சென்னைப் பச்சையப்பன் உயர்தரப் பாடசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் கா. ர. கோவிந்தராஜ முதலியார் மாணவர் பு. அ. வரதராஜ நாயகர் எழுதியது. இதிற் கொள்ளைக் கூட்டத்தாரின் கோரசம்பவங்களும், கொள்ளைக் கூட்டத்தாருடன் சேர்ந்திருந்த ஒருவன் ஒரு தவச்சிரேட்டரின் அனுக்கிரகத்தினால் முழுமுனிவனாகி, நீதிமார்க்கங்களை உபதேசிக்கும் வன்மைப் பெற்று விளங்கியதும், கதாநாயகன், கதாநாயகி, இவர்களை துன்புறுத்தியவன் துன்பமடைந்ததும், நன்மைசெய்தோர் நன்மையடையும் முறையும் வெகு அழகாய் எழுதி இருப்பதோடு, கதை முழுவதையும் விளக்கிக் கூறும் அகவற்பாக்கள் புத்தகத்தின் இறுதியிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா—10.

யாப்பருங்கலக்காரிகை மூலமும்,

குணசாகரர் இயற்றிய பழைய உரையும்.

சென்னைப் பச்சையப்பன் உயர்தரப் பாடசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர், கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் எழுதிய தெளிவு பொருள் விளக்கவுரையும், குறிப்புரையும், முன்பில்லாத சிலபாக்களின் இலக்கணமும் புதிதாக சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூபா 1 4 0

கிடைக்குமிடம்:—

"மாறன்" அச்சுக்கூடம் புரசை, சென்னை.

2771 8111
894

துறைமங்கலம்

சிவப்பிரகாச சுவாமிகள் சரித்திரம்.

சிறப்புற்றோங்கிய தொண்டைவள நாட்டின்கண் காஞ்சீ புரத்தில் சுமார் 284-வருடத்திற்குமுன் குமாரசாமி தேசிக ரென்பவர் ஒருவரிருந்தார் அவருக்கு மூன்று புத்திரர்கள் இருந்தனர். இவர்களில் மூத்தவரே சிவப்பிரகாச சுவாமிகளா வர் இவர் கல்வி பயிலுங்காலத்தே யிவர் தந்தை யிறந்தனர். பிறகு தன் சகோதரர்களோடு துறைமங்கல மென்னும் கிரா மத்தை யடைந்து ஓர் நந்தவனத்தில் சிவபூசையில் ஈடுபட் டிருந்தனர். அக்கிராம அதிகாரியான அண்ணாமலை ரெட்டியார் என்பார் ஷெ சுவாமிகளின் கல்வித்திறத்திற்கு மெச்சி அங் கோர் மடம் கட்டி அதில் சுவாமிகளையும் அவர் சகோதரர் களையும் இருக்கச் செய்தனர்.

சுவாமிகள் 2-வருடம் கழிந்தபிறகு திருநெல்வேலி ஜில் லாவிலுள்ள தருமபுரவாதீனத்து வெள்ளியம்பலவாண சுவா மிகளிடம் தன் சகோதரர்களுடன் போய்ச் சேர்ந்தனர், ஷெ வெள்ளியம்பலவாண சுவாமிகள் இவருடன் சிறிதுநேரம் உரையாடி இவர் தம்மினும் கல்வியிற் சிறந்தவர் எனத்தெரி ந்து இவரை அங்ஙனே வைத்துக்கொண்டு இவர் சகோதரர் களுக்கு பஞ்ச இலக்கணங்களையும் கற்பித்தனர். சிவப்பிரகாச சுவாமிகள் தன் சகோதரர்கள் கல்வியில் தேர்ந்தபிறகு மிக்க ஆனந்தமடைந்து இருந்தனர்.

திருச்செந்தூரிலிருந்த ஒரு புலவர் வெள்ளியம்பலவாண சுவாமிகளை அலட்சியம் செய்துக் கொண்டிருந்தனர். சிவப் பிரகாச சுவாமிகள் ஷெ சுவாமிகளின் வேண்டுகோளின்படி கல்வியில் அப்புலவரை வென்று பின்னர் துறைமங்கலத்தி லுள்ள தம்மடத்தை யடைந்து உலோகோபகாரமாக பல நூல்களியற்றி வந்தனர் சுவாமிகளின் புகழ் நாடெங்கும்பரவி யின்றது.

இவ்வளவு புகழுடன் விளங்கியதுமன்றி சுவாமிகள்,

சேய்கொண்டா ருங்கமலச் செம்மலுட னேயரவப்
பாய்கொண்டா னும்பணியும் பட்டீச்சு ரத்தானே
நோய்கொண்டா லுங்கொளலா நூறுவய தாமளவும்
பேய்கொண்டா லுங்கொளலாம் பெண்கொள்ள லாகாதே.

கிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த
பெரியோர்க ணிமலன் றாளைத்
இட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும்
பெரியசுகங் கிடைக்குங் காம
வெட்டையிலே மதிமயங்கிச் சிறுவருக்கு
மணம்பேசி விரும்பித் தாலி
கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே
கிடத்துமட்டுங் கவலை தானே.

என்று கூறித் தமது வாழ்நாட்களை விவாகமின்றிச் சுத்த வைராக்கியமாகக் கழித்து தம் 32-ம் வயதில் சிவ சாயுச்சிய பதவியை அடைந்தனர்.

ஸ்ரீ காளத்திப் புராணம் சுவாமிகளின் சகோதரர் ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டு மற்றொருவரால் முடிவு பெற்றதாகவும் புராணத்தின் இடைப்பகுதி சுவாமிகள் இயற்றியதாகவும் கூறுவாருமுளர். இவரிபற்றிய நூல்கள் பின் வருமாறு.

சோணசைல மாலை	திருக்கூவப்புராணம்
திருச்செந்தி லந்தாதி	நன்னெறி
திருவெங்கைக் கோவை	திருப்பள்ளி யெழுச்சி
திருவெங்கை யுலா	சிவஞான பாலையதேசிகர் பிள்ளைத் தமிழ்
திருவெங்கை யலங்காரம்	பழமலையந்தாதி
சிவப்பிரகாச விகாசம்	பிக்ஷாடனநவமணிமாலை
தருக்க பரிபாஷை	கொச்சகக்கலிப்பா
சதமணி மாலை	பெரியநாயகியம்மை விருத்தம்
நால்வர் நான்மணி மாலை	ஷெ கட்டளைக்கலித்துறை
சிவஞானபாலையதேசிகர் தாலாட்டு	சிவஞானபாலையதேசிகர் மகிமை
நெஞ்சுவிடுதூது	அபிஷேகமாலை
வேதாந்த சூடாமணி	நிரஞ்சன மாலை
சித்தாந்த சிகாமணி	கைத்தலமாலை
சிவலிங்க மாலை	காளத்தி புராணத்தில் சிலதும்

[stamp] 148339

உ

கணபதிதுணை.

திருக்கைலாயபரம்பரைப் பொம்மபுரம்
ஸ்ரீசிவஞானபாலயதேசிகராதீனத்து
நல்லாற்றூர் அல்லது
துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள்
அருளிச்செய்த

சோணசைலமாலை.

காப்பு.

சதுரனெழிற் சோண சைலற் றுதிப்பன்
மதுரமொழி யன்பர் மனமாங்—குதிரைதிறை
கொண்டவனென் றேத்துங் குரைகழற்கால் யானைதிறை
கொண்டவனை யென்னுளத்தே கொண்டு.

நூல்.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அண்ணன்மா புகழ்மூ வரும்புனை யரும்பா
வன்றியென் கவியுநின் றனக்காம்
பண்ணுலா மிருவ ரிசைகொணின் செவியிற்
பாணிமா றொலியுமேற் றிலையோ
விண்ணுலா முடியின் மேருவின் வடபால்
வெயிலொரு புடையுற வொருபாற்
றண்ணிலா வெறிப்ப வளர்ந்தெழுஞ் சோண
சைலனே கைலாநா யகனே. 1

சோணசைலன். சிவந்த அக்கினிமலை வடிவினன். சோணம்—சிவப்பு, அது அக்கினியை யுணர்த்திற்று.

துவக்கற வறிந்து பிறக்குமா ருருந்
துயர்ந்திடா தடைந்துகாண் மன்று
முவப்புட னிலைத்து மரிக்குமோர் பதியு
மொக்குமோ நினைக்குநின் னகரைப்
பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற்
படர்பவர் திகைப்பத நோக்கித்
தவக்கல நடத்த வுயர்ந்தெழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 2

நீங்கருந் துயர்செய் வளிமுதன் மூன்ற
னிலையுளே னவைதுரந் திடுமுன்
வாங்கிநின் றனிவீட் டுறைகுவான் விரும்பி
வந்தன னின்குறிப் பறியே
னுங்குறை மதியே தாங்கியென் றுலக
மறைதுறை யறநிறை மதியுந்
தாங்கிய முடியோ டோங்கிய சோண
சைலனே கைலைநா யகனே. 3

கனிமலை துவர்வாய்க் கோதையர்க் குருகுங்
கன்மனக் கொடியனுக் கென்னீ
துனிமலை பிறவி தவிர்த்தனை யெனநிற்
சுளிபவ ரிலையெனக் கிரங்காய்
பனிமலை கதிர்வந் துறநிலை யாடி
பயின்றபீ டிகையென வதயத்
தனிமலை யிருப்ப வளர்ந்தெழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 4

கடரிலை நெடுவேற் கருங்கணார்க் குருகித்
துயர்ந்துநின் றலமரு மாநின்
னடனவில் சரண பங்கய நினைந்து
நைந்துநைந் துருகுநா ளுளதோ

மடலவிழ் மரைமாட் டெகினென வருகு
மதியுறக் கார்த்திகை விளக்குத்
தடமுடி யிலங்க வளர்ந்தெழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 5

அருங்கவி வாத வூரனே முதலோ
ரன்பிலே மென்றது வேண்டி
யிரங்குதல் பொய்ம்மை யன்பிலே னெனையா
ளியம்பிலே மெய்யெனக் கருளாய்
கருங்கட முமிழு மீர்ங்கவுட் பணைக்கைக்
கரியுரி கஞ்சுகங் கடுப்பத்
தரங்கமுண் டெழுகார் முகில்பயில் சோண
சைலனே கைலைநா யகனே. 6

புரத்துறு மவுணக் குழாமும்வண் டிசைகூர்
பூங்கணை மதனுமுன் பெறுநின்
சிரித்தவெண் ணகையு நுதல்விழி நோக்குஞ்
சிறியனே னிருண்மலம் பெறுமோ
கருத்தினுங் கருத வரியநுண் ணியனென்
கடனற வுலகெல்லாங் காண்பான்
றரித்ததி நூல் வடிவுறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 7

ஆர்த்தெழு திரைகள் சுருண்டெறி கடனஞ்
சமுதுசெய் பெரும்புகழ்த் தனிமை
தீர்த்திட வுளங்கொண் டவலனேன் றலைநின்
றிருவடிக் கன்மனுக் கிலையே
கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்து
கண்டவ ரகத்திரு ளனைத்துஞ்
சாய்த்துநின் றெழுந்து விளங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 8

தொடையுடைத் திரடோ ணமன்புறத் துடலந்
தொலைக்குமு னகத்துட றொலைத்துத்
தடையறத் திகழ்பே ரறிவுரு வாகத்
தமியனேற் கருளுநா ளுளதோ
புடையினிற் கரிக்கோ டிளம்பிறை புரையப்
பொங்குசோ தியங்கொடி விரித்த
சடையெனப் படர்ந்து கிடந்தொளிர் சோண
சைலனே கைலைநா யகனே. 9

கண்புன றுளிப்ப வழற்படு மிழுதிற்
கரைந்துகு நெஞ்சினினின் றனையே
பெண்பயி லுருவ மொடுநினைந் தெனது
பெண்மய லகற்றுநா ளுளதோ
வண்புனல் வேந்த னூர்கலிக் குடத்து
மணிமுகிற் கலயத்தின் முகந்து
தண்புன லாட்ட வாடுறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே 10

வேலையந் துகில்சூழ் மலர்தலை யுலகின்
மெய்யினைப் பொய்யெனு மவர்க்கே
யேவலந் தருள்வ தன்றிமெய் யினைமெய்
யெனுமெனக் கருள்புரிந் திடாயோ
காலநன் குணர்ந்து சிகரம் புகுந்து
காணரி தெனுதல கனைத்துஞ்
சாலநின் றழியே கண்டிடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 11

மயிலினு லழுந்தும் பிறவியா மளற்றை
வளர்தரு நின்பெருங் கருணை
வெயிலினு லுலர்த்தி யெனதுளங் கமலம்
விரிக்குமொண் பரிதிநீ யலையோ

பயிலுமா லயமோர் சைலமோர் சைலம்
பகைப்புல முருக்குகார் முகமோர்
சைலமா துலனு மெனக்கொளுஞ் சோண
சைலனே கைலநா யகனே. 12

புலம்புரி துயரங் கழன்றுநின் கழற்கால்
புந்தியஞ் சிங்கரத் திருத்தி
நலம்புரி புனிதர் பேரவை தமியே
னணுகுவா னருணா ளுளதோ
வலம்புரி மனிதர் கடலென வொலித்து
வளைவுற நடுவண்மந் தரம்போற்
றலம்புரி தவத்தி னின்றொளிர் சோண
சைலனே கைலநா யகனே, 13

நீரினி லெழுமொக் குளினழி யுடம்பு
நிலையென நிலைக்குமா நந்த
வாரிதி படிய வறிந்திடா தழலு
மடமையே னுய்யுநா ளுளதோ
வேரியல் பதமுன் றேடுமக் கேழ
லின்றுநா டியகிளைத் திடல்போற்
சாரலி னேன மருப்புழுஞ் சோண
சைலனே கைலநா யகனே. 14

கருத்திடை நின்று கருணைமா மேனி
கண்டெடுத் தைந்துநா வியம்பச்
சிரத்தினி லமைத்த கரத்தொடு நினையான்
றினம்வலம் புரியுமா றருளாய்
வரத்திரு முடியின் மதிதிரு முடியின்
வளைந்துகந் தரத்தினி லிருள்கந்
தரத்தினி லிருத்தி விளங்குறுஞ் சோண
சைலனே கைலநா யகனே, 15

பாரெலா மிகழு மிகழ்ச்சியும் புகழ்ச்சிப்
பயனென வுணர்ந்துநா டொருமா
ரூரா ரவையி னிகழ்ந்தசொற் றுதியி
னுவக்குநின் பதந்தொழ வருளா
யேருலா மண்டச் சுவர்மதின் மிசைப்பா
லிலங்குரு மண்டகோ ளகையாச்
சாருமா லயத்தி லிலிங்கமாஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 16

இந்தியங் கரண முடலம்வே றுக்கி
யிருண்மலப் படலமுங் கீறிக்
கந்தமு மலரு மெனவினை யென்னிற்
காண்பறக் காணுநா ளுளதோ
வந்தொரு களிறு முழுவையுங் கொன்று
மலிபகை தவிர்ப்பவெண் ணிறந்த
தந்தியும் புலியும் வளர்ந்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 17

முழங்குவண் டினங்கள் விருந்துணு மலங்கன்
மொய்குழன் மகளிர்தம் மயலாற்
புழுங்குமென் றனைநின் றிருவடி நிழலிற்
புகவிடுத் தளிக்குநா ளுளதோ
வழங்குவெண் டிரையா றவிர்சடை கரப்ப
மணிமுடி நின்றிழிந் திடல்போற்
றழங்குவெள் ளருவி யிழிந்தொளிர் சோண
சைலனே கைலைநா யகனே. 18

குன்றுதோ றாடுங் குமரனே யெனவுங்
கொடுஞ்சிலை மதனவே ளெனவும்
புன்றொழின் மனிதர் புகழ்ந்துபாழ்க் கிறைக்கும்
புலமைதீர்த் தெனக்கருள் புரியா

யோங்குறு மண்ட கோளகை யளவு
முயர்ந்துமோர் மழவிடை முதுகிற்
றூங்குபு நடக்க விருந்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 47

ஈரமு மருளு மொழுக்கமுஞ் சால்பு
மின்சொலு மிந்தியப் பகைவெல்
வீரமு மருளி யெனதுவெம் பிறவி
விலக்கியாட் கொள்ளுநா ளுளதோ
வாரமு மகிலுந் தடிந்துசெம் மணிக
ளரித்தெறிந் தெறழ்வலிக் குறவர்
சாரலி னுறங்கு விதைக்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 48

தொகைமிகு மமரா முனிவார் பரவித்
தொழுதகை யொடுவிரை கமழ்பூம்
புகைமிகு மணிமண் டபத்திடை நெருங்கப்
புழுகுநீ யணிதல்கண் டுவந்தேன்
குகைமிகு வாயிற் சோதிமா மரஞ்சேர்
குளிர்மதி விழுங்கவாய் வைத்த
தகைமிகு மூரற் றிரளைநேர் சோண
சைலனே கைலைநா யகனே. 49

சினம்படு முளங்கொண் டவரவை யெனையுஞ்
சேர்ப்பது தகுமுனக் கிசைவண்
டினம்படு மலரி னகவித ழொடுபுல்
விதழுமொன் றுதலுல குடைத்தே
மனம்படு மடிமை யுளன்சிலை யெறிக்கு
மனங்குழைந் துமையவள் களபத்
தனம்பட வடிவங் குழைந்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 50

வாம்பரி கரிதேர் சிவிகைபொற் குவியல்,
மணிப்பணி பெரும்புவி யாட்சி
யாம்பரி சலவென் றுன்பத மருவி
னன்றியென் கவிகளென் கவிகள்
காம்பரி முரண்மும் மதகரி வளைத்த
கைவிட மோதலாம் கதிர்த்தேர்த்
தாம்பரி துணுக்கென் றீர்த்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 51

துன்னுறு துயரப் பிறவிவெங் கொடுநோய்
தொலைப்பினுந் தொலைத்திடா தறினு
நின்னடி மலரை யன்றியான் மறந்து
நினைப்பனோ விறக்கும்வா னவரை
மன்னளி பருக வுடைபிறான் மதுவும்
வாரண மதமும்வெள் ளருவி
தன்னொடு மிகலி யொழுகுறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 52

நீரினா லழலான் வருங்கொடும் பிணியா
னிருதரா லலகையால் விலங்காற்
சோரரால் வருந்து மவரலர் நினது
தூயமா மம்புகன் றிடுவார்
சீருலா மணியா லரிபர வுதலாற்
றிசையுற நீள்கையா லெழின்மை
சார்தலா லுமையாள் விழிநிகர் சோண
சைலனே கைலைநா யகனே. 53

முகவிளக் கென்ன மணிக்குழை மிளிர
முலைமுகட் டணிபெற மலராள்
பகல்விளக் கென்ன வொளிகெட வரும்பொற்
பாவையர்க் கிரங்கிடா தருளா

பகவிளக் கென்ன வகநிரி நெய்தி
யாக்குவோ ரின்றியே யெழுந்த
சகவிளக் கென்ன விளங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 54

கீலியோ டுனைநா டொருமருச் சித்து
நின்றொழில் புரிந்திட வுடற்குக்
கூலியோ தனைமென் றளிப்பவர்க் கன்றிக்
கூற்றினைக் கடக்குமா றெளிதோ
மாலியோ சனையின் வணங்குறுங் கைலை
மலைநிவே தித்திடக் குவித்த
சாலியோ தன்மென் றிடத்திகழ் சோண
சைலனே கைலைநா யகனே. 55

தோற்றிடும் பிறவி யெனுங்கடல் வீழ்ந்து
துயர்ப்பிணி யெனுமலை யலைப்பக்
கூற்றெனு முதலை விழுங்குமுன் னினது
குரைகழற் கரைபுக விடுப்பா
யேற்றிடும் விளக்கின் வேறுபட் டகத்தி
னிருளெலாந் தன்பெய ரொருகாற்
சாற்றினு மொழிக்கும் விளக்கெனுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 56

கந்தர மிருந்து மடகுரீ ரயின்றுங்
கரதலத் தமைத்திரு பதமு
மந்தர மிமிர்த்து நின்னிலை யறியா
ரரும்பவ மொழியுமோ வுரையா
யிந்திரன் வனத்து மல்லிகை மலரி
னிண்டைசாத் தியதென நிறைந்த
சந்திரன் முடிமேல் வந்துறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 57

கூம்புறு கரமு மலர்ந்திடு முகமுங்
கொண்டுநின் றனைவலம் புரிவோர்
மேம்படு சரண மலர்ப்பொடி மேனி
மேற்படிற் பவம்பொடி படுமே
பூம்பொழிற் புகலிக் கிறைவனு னிலஞ்சேர்
புண்ணியத் தலங்களி னடைந்து
தாம்புனை பதிகந் தொறும்புகழ் சோண
சைலனே கைலைநா யகனே. 58

கானமே மருவும் விலங்கினுங் கடையேன்
கற்பவை கற்றிலேன் விட்ய
ஞானமே யுடையே னறிஞரைக் காணி
ஞணிலே னுய்யுநா ளுளதோ
வானமே யளவு நெடுங்கிரி மல்ய
வாதமோ துறுபவர் கட்குத்
தானமே யுதவ வளர்ந்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 59

விழைவொடு மறஞ்செய் துய்கவென் றுரைக்கும்
விதியினைக் கவளமுண் கெனவுங்
கழைசுளி நெடுநல் யானையின் முனிந்து
கடக்குமென் பவமொழிந் திடுமோ
மழைமுகில் வந்து தவழ்ந்துவிண் படரு
மலிதரு புகையென வெழுந்து
தழலுரு வுண்மை விளக்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 60

வாத்திய முழங்கச் சிவிகையுங் கரியு
மாரியூர்ந் துலவிவாழ்ந் தவரு
மேத்திய மொழியோ டிரக்கையா னின்குற்
றேவலே வாழ்வென வறிந்தேன்

பர்த்திய மணிகள் கொண்டிழைத் திலங்கும்
பாரவா சிகைமணி மேகஞ்
சாத்திய தெனவில் வளைந்துறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 61

குலத்தினிற் பிறந்து மலகினூல் கற்றுங்
குணத்தினிற் சிறந்துநல் விரத
பலத்தினிற் கவர்ந்து நின்னடி யவர்க்குப்
பரிவிலார் கதியிலா தவரே
கலத்தினிற் பொலிந்த விமயமீன் றெடுத்த
கண்ணிநுண் ணிடைமிசைக் களபா
சலத்தினிற் குருதி கொடுத்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 62

மூடக விருளோ டுன்னையின் றுண்ணு
முலையர சாலகற் றவலென்
றூடரு மொழியா லடைந்தனன் றமியேன்
சூள்வழு வாதுநீ யருளாய்
விடுறுங் கவரி கீழ்விழ வுறல்கார்
மிசையனம் பன்றிதா மாறித்
தாடலை துருவ வடைதனேர் சோண
சைலனே கைலைநா யகனே. 63

ஐபநுண் மருங்குன் மாதர்மேல் வைத்த
வாதர வுன்பதாம் புயத்து
மெய்யுறு நறுமென் கலவையின் விருப்பு
வெண்டிரு நீற்றினும் வருமோ
கொய்யுறு தினைவீழ்ந் திடுபசுங் கிள்ளைக்
குழுக்கடோ ரணமென வெழுந்து
தையலர் கடியப் பறந்துறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 64

கனவினு டமைத்த விழுதென வுருகக்
கற்றதன் றுள்ளமென் கரங்கள்
புனலுமாய் மலருங் கொடுவினைப் பூசை
புரிந்தில வென்செய்கோ வுரையாய்
சினவுநோய் மருந்து வேறுகொண் டிருக்குஞ்
சிலம்புக ணுணவுட் கொள்வோர்
சனனநோய் மருந்தா யெழுந்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 65

ஊழூறு மணிப்பொற் கோயில்போய் வாவ
லுறக்கொடுத் தாங்குசிற் புணர்த்தாப்
பாழூறு மனம்பே ரவாக்குடி யிருப்பப்
பண்ணுமென் கண்ணுநண் ணுவையோ
வீழூறு மெயினர் கிழங்ககழ் குழியும்
வேழம்வீழ் குழிகளு நிரம்பத்
தாழூறு மருவி பொன்சொரி சோண
சைலனே கைலைநா யகனே. 66

பைம்மறைப் படுத்தி னுள்ளறி யாமற்
பணிநறுந் துகில்புனை மடவார்
மெய்ம்மிசைக் கருந்தோல் கண்டுவந் துழலும்
வினையினே னுய்யுநா ளுளதோ
செம்மலர்ப் பதம்பா தலங்கடந் திடவான்
றிருமுடி கடப்பினு மூவர்
தம்மியற் செப்பி னடங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 67

செக்குறு திலத்தின் வருந்துபு பிறக்குஞ்
செல்லலு நாடியின் பிணிப்பு
நெக்குற வறிவு கலங்குசாக் காடு
நினைதொறு முளம்பதைக் கின்றேன்

மொய்க்குறு முகில்கண் டரிகரி யென்னு
முழக்கமு மரகர வென்னுந்
தக்கவர் முழக்கு மெதிரெழுஞ் சோண
சைலனே கைலா யகனே. 68

மரணமும் பிறவித் துயருநீங் குறநூல்
வாய்ச்சிலம் பிக்கருள் புரிந்த
கருணியென் றுனைவந் தடைந்தன னினிநின்
கருத்தினை யின்னதென் றறியேன்
முரணிபம் பரூஉக்கை தலைமிசை யெடுப்ப
முழைக்கரும் பாம்பென மணித்தேர்த்
தரணியுள் வெருவி யகன்றிடுஞ் சோண
சைலனே கைலா யகனே. 69

அங்கையின் வைத்த கூர்ங்கனன் மழுவா
லருவினைக் காடற வெறிந்து
மங்கலில் பத்தி வித்திட வடியேன்
மனத்தினைத் திருத்துநா ளுளதோ
பொங்குறு செக்கர் கருவிசும் புறவேள்
புறத்தெரி கதுவிட நோக்கித்
தங்குத லொப்ப நின்றிடுஞ் சோண
சைலனே கைலா யகனே. 70

சுருக்குமைம் புலனும் விரிக்குமூ தறிவுந்
துன்னுநல் வினமுநீத் தகன்றே
யிருக்கும்வெங் கயவ ரினமுமென் றருளி
யென்னைநின் னடிமைசெய் தருள்வாய்
முருக்குமங் கதமா மணியுமிழ்ந் தகன்ற
முழைதழற் றெனவுளம் வெருவித்
தருக்குமொன் புலிசென் றறமருள் சோண
சைலனே கைலா யகனே, 71

அந்தரி குமரி யஞ்சலி கௌரி
யம்பிகை மனோன்மணி மதங்கி
சுந்தரி யுமையுண் ணாமுலை யெனநின்
றுணைவியை வாழ்த்துமா றருளாய்
வந்தரி சுருதி மங்கினிற் பாட
வயங்குதும் புருவுநா ரதனுந்
தந்திரி யிசையாழ் பாடுறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே 12

நீக்குறு மயலு நிலைத்தபே ரறிவு
நின்றிரு வடிமலர்க் கன்பு
காக்குறு மனமு முடையமெய்த் தொண்டர்
கணத்தினு ளெனைவிடுத் தருளாய்
தேக்குறு மிருளிற் கன்னல்காட் டுவபோற்
றென்னல்வந் தசைதொறு மெல்லத்
தாக்குறு காந்த டுடுப்பலர் சோண
சைலனே கைலைநா யகனே. 13

பவமிலே மினியா மென்றிறு மாந்து
பயமற விருந்திடப் பத்தி
நவமிலே மடியே மென்செய்வா னிருந்து
நாளினை வறிதொழிக் கின்றே
மவமிலே மிமையா விழியினுற் காண்கை
யால்வலங் கொளந்தடி நிலந்தோய்
தவமிலே மெனவான் சுரர்தொழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 14

கண்கணிற் பரிந்து கண்டுவப் பனவே
கைகணிற் றொழுபவே செவிகள்
பண்களிற் புகழும் புகழ்ச்சிகேட் பனவே
பதங்களே வலம்புரி வனவே

யெண்குபும் றிடப்ப வெழுமணி கரவா
விருந்துசென் றிருள்கவர் வனபோற்
றண்கதிர்க் கற்றை கான்றிடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 75

நிணந்திகழ் வடிவேற் காளையே யென்று
நேரிழை யவர்விழைந் திடுவோர்
குணங்கிரி தளிரின் மடியங் கண்டு
கொடியனேன் வாழ்வுவந் திருந்தேன்
மணந்திமிர் மகளிர் சிலம்பொடு மைந்தர்
வார்கழ றுவக்கிட வலம்போய்த்
தணந்திடு மமயத் தறிந்துநாண் சோண
சைலனே கைலைநா யகனே. 76

மாந்தளிர் கவற்று மணிச்சிலம் படிகள்
வடுவகிர் பொருவும்வா ணெடுங்கண்
காந்தளி னிமைக்கு மங்கையென் றவலக்
கன்னியர்ப் புகழ்வினை யறுமோ
பூந்திரை சுருட்டுங் கடல்கடை ஞுநரொண்
பொறியர வின்றிமா தவர்க்கு
சாந்துய ரகற்று மருந்தருள் சோண
சைலனே கைலைநா யகனே. 77

சிந்தனை கலங்கி யிணைவிழி யிருண்டு
செவிகளுஞ் செவிடுபட் டைம்மே
லுந்திட வுயிர்போம் பொழுதுநின் வடிவ
முளங்கொளும் பரிசெனக் கருளாய்
மந்தர சைலந் தருவிடங் களத்து
வைத்திடத் தினிவிம சைலந்
தந்திடு மமுதை வைத்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 78

நயங்கொளு மலரா னின்றிரு வடியை
நாடொறு முயிருணுங் கூற்றம்
பயங்கொள வகலா தருச்சனை புரிந்து
பரகதி யடையுநா ளுளதோ
வயங்கொளும் விடயப் பெரும்பகை கடந்து
வானநா டாண்டிட மதிப்போர்
சயங்கொள வடைதற் கரணமாஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 79

பிரம்பொரு கரங்கொண் டடிப்பங் தீசர்
பெருங்கல் வீழ்பாசியி னிமையோர்
சிரம்பொர வொதுக்கி நெருங்கிநின் னவையிற்
றீயனே னணையுநா ளுளதோ
வரம்பொர வகன்ற விலங்கிலை நெடுவே
லமர்த்தகட் கிரிமக ளிணைக்குஞ்
சரம்பொர விருந்து விளங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 80

தாமரை முனிந்த முனிவரர் புகுமெய்க்
கதியிடைப் புகவிடுத் திடினும்
பாமர னிவனென் றிருளினுப் பினுநின்
பதமல ரன்றிவே றுளதோ
வாமரை பொருந்து முலகுள குவட்டு
மலைகள்போ லாதுணு முலையாந்
தாமரை பொருந்து மானுள்வாழ் சோண
சைலனே கைலைநா யகனே. 81

தொடுக்குமா கமங்க ளெலாஞ்சொலைந் தெழுத்துஞ்
துணிந்தநெஞ் சிருக்கையாற் பகையைப்
படைக்கைதா னிருந்து மஞ்சுறு மவர்போற்
படட்டுமா மறலியை வெருவேன்

படக்குவார் கலாப மயிறயி லெழுந்து
    மருவலர் வேங்கைமீ தகவத்
தடக்கைவா ரணங்கள் பிளிறிடுஞ் சோண
    சைலனே கைலைநா யகனே. 82

நிந்தியா துடல முழுதுநீ றணிய
    நேசியா தமலவைந் தெழுத்துஞ்
சிந்தியா துழலு மெனைக்கொடுங் கூற்றென்
    செய்யுமோ வறிந்திலேன் றமியேன்
வந்தியா வரவ மன்றிடைக் கண்ட
    மலர்சிலம் படியைமண் ணுணிபோய்ச்
சந்தியா தயர வொளித்திடுஞ் சோண
    சைலனே கைலைநா யகனே. 83

மங்கையர் பாரக் கொங்கையங் குவட்டு
    மதர்விழிக் கடலினு மளகக்
கங்குலி னூடுஞ் சென்றவென் மனத்தைக்
    கதியிடை நடத்துமா றெளிதோ
செங்கதிர் மாலை மாலையுந் தங்கச்
    சிலம்புள வெனக்கடும் பகலிற்
றங்குற நீடி நின்றிடுஞ் சோண
    சைலனே கைலைநா யகனே. 84

கண்டிகைக் கலனே கலனென விழைந்து
    காயமே லணிந்துவெண் ணீற்றுப்
புண்டரக் குறிசேர் நுதலொடு நினையான்
    பூசனை புரியுமா றருளாய்
முண்டகச் செழும்பூ வெனவிளக் கெரியு
    முடிமிசை முத்துமேற் கட்டித்
தண்டிரைக் கங்கை யாறுசேர் சோண
    சைலனே கைலைநா யகனே. 85

நாவினைந் தெழுத்து மந்திர மலாத
நவிற்றுவோர் தமையுநீ யிருப்பப்
பாவினங் கொடுபுன் மனிதரைப் புகழும்
பாமரர் தமையுமென் றொழிவேன்
கோவினம் புரப்பக் குன்றமன் றெடுத்த
குன்றமம் பாடகக் குன்றந்
தாவினஞ் சிலையென் றெடுத்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 86

திங்களுங் கதிரு மிலங்கிய மானுந்
திகழ்பெரும் பூதமோ ரைந்துங்
கங்குலும் பகலுங் கடந்தநின் வடிவங்
கண்டுகண் களிக்குநா ளுளதோ
பொங்குகுங் குலியக் கலயவா ரழலிற்
புகையெனச் சரோருக வல்லி
தங்குவண் டெழுபூம் பொய்கைசூழ் சோண
சைலனே கைலைநா யகனே. 87

பொறியெனப் புலன்க ளெனக்கர ணங்கள்
பூதங்க ளெனவிலா தடங்க
வறிவெனத் தமியேற் கொருமொழி யுதவி
யருவினைக் குறும்பற வெறியாய்
செறுமுலைக் கரியுஞ் சிற்றிடை யரியுஞ்
சேரமா துமைதினங் கட்டுந்
தறியெனக் கவின்பெற் றிலங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 88

பொன்னிடைத் தடைந்த மணியென வடைந்து
புண்ணியர்க் கருளுநின் பதங்க
ளென்னிடத் திருப்பி னடைந்த செம்மணிபோ
லெய்திய தம்மவோ வியப்போ

மன்னிடக் கடலு ளடங்கும்வெற் பன்றி
மலைதரு மருட்பெருங் கடலைத்
தன்னிடத் தடக்கு மலையெனுஞ் சோண
சைலனே கைலையா யகனே. 89

நீங்கிய நேயத் தவர்க்கறி வரிய
நெடியவ னெஞ்சகன் றிடாத
தேங்கிய சோதி மன்றுளா டுவவென்
சிந்தையு ணடப்பநின் பதங்க
ளோங்கிய மூங்கிற் றலைமிசை மலர்வீழ்ந்
தழுமளி பிரியிருன் மருவித்
தாங்கிய வால வட்டநேர் சோண
சைலனே கைலையா யகனே. 90

எழுபசும் புல்லும் புனலுமெவ் விடத்து
மிருந்திட நினைத்தவவ் விடத்தே
விழைவொடு வந்து தோன்றுநீ யிருப்ப
வீணின்மா னுடர்பிறந் துழல்வார்
மொழிதரு கருணை மலையெனும் பெயரன்
மொழியொரிஇ வேற்றுமைத் தொகையைத்
தழுவுற நின்று வளர்ந்திடுஞ் சோண
சைலனே கைலையா யகனே. 91

வேணவா வகன்று நின்றிரு வடியின்
மெய்ம்மையன் படைந்துபொய்ப் பிறவி
நாணுவா ரினங்கண் டுறும்படி தூய
ஞானநாட் டம்பெற வருளாய்
சேணுலா மதியந் தவழ்பெருங் குடுமிச்
சிலம்புகள் சிறுதுரும் பாகத்
தாணுவா யெழுந்து வளர்ந்திடுஞ் சோண
சைலனே கைலையா யகனே. 92

நின்னையே நோக்கி விடாதகட் புலனு
நின்னையே நினைக்குநெஞ் சகமு
நின்னையே துதிக்கு நாவுமென் றருளி
நின்றிரு வடியின்வைத் தருள்வாய்
தன்னையே நினர்க்குச் சகமெலாங் காட்டுந்
தரணியோ டிகலிமே வினர்க்குத்
தன்னையே காட்டு மலையெனுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 93

மின்வணங் கவருஞ் செஞ்சாட டவியும்
விளங்கொளி மார்பும்வா னுலக
மன்வணங் குறுநின் பதாம்புய மலரு
மனங்குடி யுருக்குநா ளுளதோ
பொன்வணம் புரியுங் காகமொன் றினம்பொற்
பொரும்பென வடைபொரு ளனைத்துந்
தன்வணம் புரியும் பொருப்பெனுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 94

குருமணி மகுடம் புனைந்துல காளுங்
கொற்றவ ராதலி னென்கட்
கருமணி யெனுநின் றொண்டர்குற் றேவல்
கருதியாட் பட்டிட லினிதே.
பெருமணி விசும்பி னுச்சியி னெழுந்த
பிள்ளையங் கதிரென வரவர்
தருமணி யொளிவெண் மதியுறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 95

சிம்புளாய் மடங்க லெறுழ்வலி கவர்ந்த
திறலுமுப் புரஞ்சுடு விரலு
மம்புயா தனத்தன் முடிகளைந் திட்ட
வடலுமேத் தினர்க்கிட ருளதோ

வும்பர்மா மதியி லங்கையி லிருந்த
வுழைகுதித் திருப்பவா ரழல்வான்
றம்பமா யெழுந்து நின்றிடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 96

அஞ்சலென் றவலக் கொடியனேன் றனைநின்
னடியரிற் கூட்டுக வுலகி
னஞ்சமுண் டிருண்ட கண்டமென் றுனது
நற்கள மிகழ்பவ ருளரோ
வஞ்சமைங் கரன்கொண் டிளவலோ டிகலி
வலங்கொள்வா தின்னும்வந் துறினுந்
தஞ்சமென் றிடாது நின்றிடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 97

அணிந்திடு கலனுஞ் சாந்துமொண் டுகிலு
மரிவையர் போகமும் பெறுவான்
றணிந்திடு மனமென் றனைப்பொரு ளாகத்
துணியுமோ வறிந்திலேன் றமியேன்
பணிந்திடு மயன்மால் பெருமைக ளனைத்தும்
பறவைகொண் டெழுதலாய் முடிந்து
தணிந்திட நிமிர்ந்து நின்றிடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 98

பூவுறு தடமு மதியுறு விசும்பும்
பூணுறு முறப்புநின் றலகாள்
கோவுறு நகரு மென்னவென் மனநின்
குரைகழன் கருவுநா ளுளதோ
வோவுறு மனைசெய் பவர்கொள மரந்தாங்
கோங்கல்க ளனைவுன் னினர்க்குத்
தாவுறு முயர்வீ டளித்தருள் சோண
சைலனே கைலைநா யகனே. 99

சீரணி புகழுங் கல்வியுஞ் சிறந்த
செல்வமு மில்லில்வாழ் பவர்க்குப்
பேரணி கலமென் புதல்வருங் கதியும்
பெறத்துதிப் பவர்க்கருள் பவனீ
நேரணி கதியை மறந்தவர் கண்டு
நினைந்துற மிக்கபே ரருளாற்
றூரணி முழுதுந் தோன்றிடுஞ் சோண
சைலனே கைலா யகனே. 100

சிறப்புப்பாயிரம்.

வணாருஞ் சோண சயிலனுக் கெஞ்ஞான்றும்
பூணார மாலைப் புனைந்தணிந்தான்—மாணாப்
பவப்புணரி நீந்திபிடப் பாரதிநூல் செய்த
சிவப்பிரகா சையன்முன் றேர்ந்து.

சோணசைலமாலை - முற்றிற்று.

சென்னை-600 005
148389

கவிச்சக்கரவர்த்தியாகிய

ஒட்டக்கூத்தர் அருளிச்செய்த

ஈட்டி யெழுபது

மூலமும்-உரையும்.

மகாகவியாகிய ஒட்டக்கூத்தர் செங்குந்தத் தலைவர்கள் மீது பாடிய இவ்வீட்டியெழுபதை முன்னிருந்த பிரதிகளை விட ஒருவாறு திருத்தியும், சில குறிப்புகளை எழுதியும் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா **6**

மகாகவியாகிய கம்பர்

அக்னிவம்ச க்ஷத்திரிய மகாராஜர்களாகிய

வன்னிய பூபதிகள்பேரிற் பாடிய

செம்பொற்சிலை யெழுபது.

இச் செம்பொற்சிலை பெழுபதென்னும் புத்தகத்தை முற்பதிப்பைவிட திருத்தியும், விளக்கியும், புதுக்கியும் தற்கால நாகரீகத்துக்கேற்ற டபுள் கிரௌன் 16-பேஜ் சைசில் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா **2**

ஏரெழுபதும்,

திருக்கைவழக்கமும்.

கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்டர் உழவர்களாகிய காராளர் மீது பாடிய ஏரெழுபது என்னும் இந்நூலை வெகு சுத்தமாக திருத்தி முன்னிருந்த பதிப்புகளைவிட மிகவும் அழகான டபுள்கிரவுன் 16-பக்கம் கொண்ட சைசில் அச்சிடப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா **2**.

கிடைக்குமிடம்:— "மாறன்" அச்சுக்கூடம்,

புரசை, சென்னை.

3-67

வண்ணத் திரட்டு

இதில் பல வித்துவான்களால் இயற்றப்பட்ட வண்ணங்களும், தண்டபாணி சுவாமிகள் என்னும் (புலவர் புராணம் பாடிய) முருகதாசர் இயற்றிய வண்ணமும், சென்னைப் பச்சையப்பன் உயர்தரப் பாடசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் இயற்றிய வண்ணமும், வசனநடையில் எழுதிய வண்ணப்பாவின் இலக்கணமும் சேர்க்கப்பட்டிருப்பதோடு வண்ணப்பாவின் இலக்கணத்தை கூறும் பண்டைய சூத்திரமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா—8.

திவ்வியகவி பிள்ளைப் பெருமாளையங்கார்

• அருளிச்செய்த

அஷ்டபிரபந்தம்.

இதற்குச் சென்னைப் பச்சையப்பன் உயர்தரப் பாடசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் மாணவர் பு அ கோவிந்தராஜ நாயகர் இயற்றிய துறைவிளக்கமும், அரும்பத உரையும், இந்நூலாசிரியர் இயற்றிய திருநறையூர்நம்பி மேகவிடுதூதும், திருத்தல மகிமையும், திருத்தலங்களுக்கு திருநாமம் வந்த காரணமும், புதிதாக எழுதப்பட்டிருக்கின்றன. விலை ரூ—1

பலவித்துவான்கள் பாடிய

சீட்டுக்கவித் திரட்டு.

புலவர்கள் பலர் பல பிரபுக்களின்மேற் பாடியதை எந்தெந்த புலவர் எந்தெந்த பிரபுவின்மேற் பாடினரோ அப்பிரபுவின் நாமதேயமும் புலவர்கள் நாமதேயமும் பாட்டின் தலைப்பாக அமைக்கப்பட்டிருப்பதால் இது தமிழ்ப் பயிலும் மாணவருக்கும் மற்றவருக்கும் மிகவும் உபயோகமானது.

விலை அணா—3

கிடைக்குமிடம்:— "மாறன்" அச்சுக்கூடம்,

பூரசை, சென்னை.